# Early Intervention Inaugurations

## 17.06.2021

## மாற்றுத்திறனாளிகள் தேசிய நிறுவனத்தில் ஆரம்ப நிலை பயிற்சி மையம் திறப்பு விழா

**திருப்போரூர்:** செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் அடுத்த முட்டுக்காடு பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனம் இயங்கி வருகிறது. இதில், அனைத்து வகை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சி மையத்தில் 6 வயதுடைய குழந்தைகளுக்கு, உடலில் ஏதேனும் ஊனம் மற்றும் குறைபாடுகள், வளர்ச்சி நிலையில் ஏற்படும் தாமதம், இயலாமை உள்ளவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் தொழில்முறை உதவிகள் வழங்கப்பட உள்ளன.

மேலும், குழந்தைக்கு ஆரம்ப நிலையிலேயே குறைபாடுகளை கண்டறிந்து, முறையான பயிற்சி மூலம் குறைபாட்டை விரைவாக சரி செய்வதற்கு பயிற்சி மையம் உதவியாக இருக்கும்.

இப்பயிற்சி மையத்தை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் தாவர்சந்த் கெலாட் காணொலி மூலம் நேற்று தொடங்கிவைத்தார். இதில், இணை அமைச்சர்கள் ரதன் லால் கட்டாரியா, ராம்தாஸ் அதாவலே, கிருஷன் பால் குர்ஜார் மற்றும் செயலர் அஞ்சலி பவ்ரா, இணை செயலர் தாரிகா ராய் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணா நீர் பூண்டிக்கு விநாடிக்கு

Hindu Tamiliasai 18.06.2021

## மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிறுவனத்தில்

# அனைத்துவகை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மைய திறப்பு விழா

சென்னை, ஜூன்.17–

சென்னையில் அருகே உள்ள முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில் அனைத்துவகை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் மற்றும் இந்தியாவின் உள்ள 13 மாநிலங்களில் (கொல்கத்தா, கட்டாக், மும்பை, டெஹ்ராடூன், டெல்லி, செகந்திராபாத், லக்னோ, கோழிக்கோடு, சுந்தர்நகர், நெல்லூர், பாட்னா, ராஜ்நாந்தகன், மற்றும் போபால்) அமைந்துள்ள பயிற்சி மையத்தை இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அமைச்சர். முனைவர் தாவார்ச்சண்ட் கெஹலோட், இணைய வாயிலாக இன்று காலை துவக்கி வைத்தார்.




இவ்விழாவில் இத்துறை சார்ந்த இணை அமைச்சர்கள் ரதன் லால் கட்டாரியா, ஸ்ரீ.ராம்தாஸ் அதாவலே, கிருஷன்பால் குர்ஜார், மற்றும் அஞ்சலி பவ்ரா, செயலாளர், திருமதி தாரிகா ராய், இணை செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த பயிற்சி மையத்தில் 0 – 6 வயதுடைய குழந்தைகளுக்கு உடலில் ஏதேனும் ஊனம் மற்றும் குறைபாடுகள், வளர்ச்சிநிலையில் ஏற்படும் தாமதம், இயலாமை, உள்ளவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் தொழில்முறை உதவிகளை வழங்குவதற்காக இந்த மையம் அமைந்துள்ளது.

ஒரு குழந்தைக்கு ஆரமப நிலையிலேயே ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டு அதை கண்டறிந்து முறையான பயிற்சி வழங்கினால் அந்த குறைபாட்டை விரைவாக சரி செய்ய முடியும்.

அதற்கு இந்த பயிற்சி மையம் பேருதவியாக அமையும். இந்த பயிற்சிமையத்தில் மாற்றுத்திறனாளிகள் உரிமைச்சட்டம் 2016 ஆண்டில் வெளியிடப்பட்ட சட்டத்தில் வரையறுக்கப்பட்ட 21 வகையான ஊனத்தால் பாதிக்கப்பட்ட (06) வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படும்.

**Maalai News 17.06.2021**